செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 21.08.2023

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2021=100): ஜுலை 2023**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2013=100 என்ற சுட்டெண் குறுப்பீட்டுக் காலத்தைக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) 2023ஜனவரி முதல் 2021=100 என்ற புதிய சுட்டெண் குறிப்பீட்டுக் காலத்துக்கு இற்றைப்படுத்தப்பட்டது. 2023ஜுலை தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 4.6% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2023 ஜுன் மாதத்தின் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 10.8% ஆக இருந்தது. 2023 ஜுலை மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே -1.2% மற்றும் 5.7% ஆக காணப்படுகின்றன. இருப்பினும், மாதாந்த அடிப்படையில் உணவுப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2023 ஜுன் மாதத்தில் பதிவாகிய 2.5% இல் இருந்து 2023 ஜுலை மாதத்தில் -2.5% வரை குறைவடைந்தது என்பதுடன், உணவல்லாப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமும் 2023 ஜுன் மாதத்தில் பதிவாகிய 18.3% இல் இருந்து 2023 ஜுலை மாதத்தில் 10.9% வரை குறைந்துள்ளது.

மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில், 2023 ஜுன் மாதத்தில் பதிவாகிய 203.3 இலிருந்து 2023 ஜுலை மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021=100) 201.9க்கு குறைந்துள்ளது. இது 2023 ஜுன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 1.4 சுட்டெண் புள்ளிகள் அல்லது 0.7 வீத குறைவைக் காட்டுகிறது. உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களில் முறையே 0.17% மற்றும் 0.53% ஆல் ஏற்பட்ட குறைவுகள் இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களித்தது.

தேங்காய், காய்கறிகள், தேங்காய் எண்ணெய், அரிசி, பிஸ்கட் வகைகள், பாண் (சாதாரண), மைசூர் பருப்பு, பால் மா, மிளகாய் தூள், புதிய மீன், பாசிப்பயறு, பன்கள், காய்ந்த மிளகாய், கோதுமை மா, அரிசி மா, நூடுல்ஸ் மற்றும் மஞ்சள் தூள் ஆகியவற்றுக்கான உணவுப் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. எவ்வாறாயினும், பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு, முட்டை, பெரிய வெங்காயம், புதிய பழங்கள், கோழி இறைச்சி, கருவாடு, தேயிலை தூள்/இலைகள், சிவப்பு வெங்காயம், சீனி, வெள்ளைப்பூண்டு, இஞ்சி மற்றும் டின் மீன் ஆகியவற்றின் விலையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடும்போது, 2023 ஜுலை மாதத்தில் உணவு அல்லாத பிரிவுகளின் சுட்டெண் பெறுமதிகள் குறைந்தமைக்கு, "வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள்" (மின்சாரப் பட்டியல் மற்றும் எல்பி கேஸ்), 'சுகாதாரம்" (மருத்துவ/மருந்தக பொருட்கள் கொள்வனவு) மற்றும் "ஆடை மற்றும் காலணி" (ஆடை) ஆகிய பொருட்கள் பிரிவுகளின் விலைக் குறைவுகள் முக்கியக் காரணமாகும். எவ்வாறாயினும், "அற்கஹோல் பானங்கள், புகையிலை மற்றும் மதிமயக்க மருந்துகள்" (சாராயம், சிகரெட்டுகள்), "பொருத்துதல், வீட்டு உபகரணங்கள் மற்றும் வழக்கமான வீட்டு பராமரிப்பு", "போக்குவரத்து" (பெட்ரோல்), "பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம்" (அதிர்ஷ்டலாப சீட்டுக்கள் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள், காகிதாதிகள்), "கல்வி" ( மேலதிக வகுப்பு கட்டணம்), "உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள்" மற்றும் "நானாவித பொருட்கள் மற்றும் சேவைகள்' ஆகிய பொருட்கள் பிரிவுகளில் விலை அதிகரிப்பு பதிவாகியுள்ளது. அதேநேரம், 'தொடர்பாடல்' பிரிவின் விலைக் குறியீடுகள் இந்த மாதத்தில் மாறாதிருந்தன.

2023 ஜுலை மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021=100) அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது 2023 ஜுன் மாதத்தில் பதிவான 11.3% இல் இருந்து 6.3% இற்கு குறைவடைந்திருந்தது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2021 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| 2022 | யூலை | 193.1 | 233.4 | 167.1 | 176.8 | 5.2 | 5.6 | | | | |
| | ஆகஸ்ட் | 197.7 | 237.5 | 171.9 | 181.2 | 2.4 | 2.5 | | | | |
| | செப்ரெம்பர் | 201.9 | 239.1 | 178.0 | 185.9 | 2.1 | 2.6 | | | | |
| | ஒக்ரோபர் | 201.6 | 236.5 | 179.1 | 188.0 | -0.1 | 1.1 | | | | |
| | நவம்பர் | 200.3 | 233.2 | 179.1 | 187.8 | -0.6 | -0.1 | | | | |
| | டிசெம்பர் | 200.4 | 232.4 | 179.8 | 188.0 | 0.0 | 0.1 | | | | |
| 2023 | ஜனவரி | 201.8 | 232.8 | 181.8 | 189.8 | 0.7 | 1.0 | 53.2 | 53.6 | 52.9 | 52.0 |
| | பெப்ரவரி | 204.1 | 228.1 | 188.6 | 189.4 | 1.1 | -0.2 | 53.6 | 49.0 | 57.4 | 50.1 |
| | மார்ச்சு | 204.8 | 223.2 | 193.0 | 188.1 | 0.3 | -0.7 | 49.2 | 42.3 | 54.9 | 44.2 |
| | ஏப்ரல் | 202.7 | 223.8 | 189.1 | 188.2 | -1.0 | 0.1 | 33.6 | 27.1 | 39.0 | 31.8 |
| | மே | 203.1 | 226.1 | 188.3 | 187.8 | 0.2 | -0.2 | 22.1 | 15.8 | 27.6 | 21.6 |
| | யூன் | 203.3 | 228.4 | 187.1 | 186.5 | 0.1 | -0.7 | 10.8 | 2.5 | 18.3 | 11.3 |
| | யூலை | 201.9 | 227.5 | 185.3 | 188.0 | -0.7 | 0.8 | 4.6 | -2.5 | 10.9 | 6.3 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்